# பங்குடைமை





## பங்குடைமை

1890ம் ஆண்டின் பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின்படி “இலாபம் பெறும் நோக்கில் வணிகமொன்றை நடாத்திச் செல்லும் தனிநபர்களுக்கிடையே காணப்படும் உறவுமுறையே பங்குடைமை ஆகும்.”

### பங்குடைமை தொடர்பான சட்டங்கள்

- 1890ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச் சட்டம் (பிரிவு 24, பிரிவு 42)
- 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 519ம் பிரிவு
- 1840ம் ஆண்டு 7ம் இலக்க மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டம்
- 1918ம் ஆண்டு 6ம் இலக்க வணிகப் பெயர் பதிவுச் சட்டம்.

### 1890ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச்சட்டம் பிரிவு 42இல் உள்ளடக்கப்படும் முக்கிய விடயங்கள்

பங்குடைமையிலிருந்து பங்காளர் விலகியிருந்தால் அவரது உரிமைப்பங்கானது அவர் இளைப்பாறிய திகதியில் செலுத்தாதுவிடின் அத்திகதியிலிருந்து மீளச் செலுத்தும் காலம் வரை ஆகக்குறைந்தது 5% வட்டி செலுத்தப்பட வேண்டும்

தொகுப்பு திரு சி.திருக்குமரன், ஆசிரியர் கணக்கீடு, (யா/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி)
கணினிவடிவமைப்பு திரு கோ.கேதாரன், த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

1890ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச்சட்டம் பிரிவு 24இல் உள்ளடக்கப்படும் முக்கிய விடயங்கள்

- பங்காளர் அனைவரும் ஈடுபடுத்தும் மூலதனத்தொகை சமனாக காணப்பட வேண்டும்.
- இலாப நட்டங்கள் அனைத்துப் பங்காளரும் சமனாக பகிர்ந்து கொள்ளல்.
- மூலதனத்திற்கு வட்டிபெறும் உரிமை இல்லை.
- நிர்வாக நடவடிக்கைகளில் அனைத்துப் பங்காளரும் ஈடுபட வேண்டும் எனினும் அதற்கு சம்பளம் பெறும் உரிமை இல்லை.
- மூலதனத்திற்கு மேலதிகமாக பங்காளர் வழங்கிய கடனிற்கு ஆகக்குறைந்தது 5% வட்டி பெறும் உரிமையுண்டு.
- பங்குடைமை வணிகமொன்றின் செலவொன்றை பங்காளர் தனிப்பட்ட முறையில் செலுத்தியிருந்தால் அத்தொகை அவர்களுக்கு மீள வழங்கப்பட வேண்டும்.

தொகுப்பு திரு சி.திருக்குமரன், ஆசிரியர் கணக்கீடு, (யா/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி)
கணினிவடிவமைப்பு திரு கோ.கேதாரன், த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 519ம் பிரிவில்

பங்குடைமை வணிகமொன்றின் உச்ச பங்காளர் எண்ணிக்கை 20 பேர் என வரையறுக்கப்பட்டுள்ளது.

## 1840ம் ஆண்டு 7ம் இலக்க மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டத்தில் உள்ளடக்கப்படும் முக்கிய விடயங்கள்

ரூ.1000ற்கு மேற்பட்ட ஆரம்ப மூலதனத்தை கொண்ட எந்தப் பங்குடைமையும் எழுத்து மூலமான உடன்படிக்கையே வைத்திருக்க வேண்டும்.

## 1918ம் ஆண்டு 6ம் இலக்க வணிகப்பெயர் பதிவுக் கட்டளைச் சட்டத்தில் உள்ளடக்கப்படும் முக்கிய விடயங்கள்

பங்குடைமை வணிகமொன்று பங்காளரது பெயரை தனது பெயராக கொண்டிருப்பின் பதிவு செய்தல் கட்டாயமானதல்ல. எனினும் பொதுப்பெயரைக் கொண்டிருப்பின் பதிவு செய்தல் கட்டாயமானதாகும்.

தொகுப்பு திரு சி.திருக்குமரன், ஆசிரியர் கணக்கீடு, (யா/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி)
கணினிவடிவமைப்பு திரு கோ.கேதாரன், த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பங்குடைமை ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்படும் முறைகள்

- எழுத்து மூலம்
- வாய்மொழி மூலம்
- நடத்தை மூலம்

## பங்குடைமை ஒப்பந்தம் ஒன்றில் உள்ளடக்கப்படக் கூடிய விடயங்கள்

- மூலதனத்திற்கு பங்களிப்பு செய்யும் முறை
- பங்காளர்கள் இலாப நட்டங்களை பகிர்ந்து கொள்ளும் முறை
- பங்காளர் முகாமைத்துவத்திற்கு பங்களிப்புச் செய்யும் முறை
- பங்காளருக்கு சம்பளம் வழங்கப்படும் முறை
- மூலதனத்திற்குரிய வட்டி வழங்கப்படும் முறை
- பங்காளர் கடன்களுக்கான வட்டி செலுத்தும் முறை
- நன்மதிப்பு பதிவு செய்யும் முறை.

தொகுப்பு திரு சி.திருக்குமரன், ஆசிரியர் கணக்கீடு, (யா/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி)
கணினிவடிவமைப்பு திரு கோ.கேதாரன், த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் 1 எனவும் பிழையாயின் 2 எனவும் குறிப்பிடுக.

1. பங்குடைமை வணிகமொன்றிற்கு ஒப்பந்தம் ஒன்றிருத்தல் அவசியமாகும்………..…………………..

2. பங்குடைமை வணிகமொன்றின் உச்ச எண்ணிக்கையானது 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 519ம் பிரிவினால் வரையறுக்கப்பட்டது...............................

3. ஒப்பந்தம் ஒன்றை கொண்டிராத பங்புடைமையொன்றின் இலாபநட்ட வீதம் அவர்கள் ஈடுபடுத்திய மூலதன வீதத்திற்கு சமனாகும்....................................

4. 1890ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச்சட்டத்தின் 42ம் பிரிவு பங்காளர் மூலதனத்திற்கு மேலதிகமாக வழங்கிய கடனுக்கு 5% வட்டி என வரையறுக்கின்றது ..........................................

5. 1890ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச் சட்டத்தின் 24ம் பிரிவு பங்காளர் மூலதனத்திற்கு ஆண்டுக்கு 5% வட்டி என வரையறுக்கின்றது................................



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# பங்குடைமை வணிகமொன்றின் விசேட கொடுக்கல் வாங்கல்கள்

| இல | கொடுக்கல் வாங்கல் | இரட்டைப்பதிவுகள் |
|---|---|---|
| 01 | பங்காளர் மூலதனமிடல் | காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு<br>பங்காளர் மூலதனக் கணக்கு செலவு |
| 02 | பங்காளர் பற்று | பற்று/பங்காளர் நடைமுறைக் கணக்கு வரவு<br>காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு |
| 03 | பங்காளர் பொருள் பற்று | பற்று/பங்காளர் நடைமுறைக் கணக்கு வரவு<br>கொள்வனவுக் கணக்கு செலவு |
| 04 | பங்காளர் வழங்கிய கடன் | காசுக் கணக்கு வரவு<br>பங்காளர் கடன் கணக்கு செலவு |
| 05 | பங்காளர் சம்பளம் | இலாபநட்ட பகிர் கணக்கு வரவு<br>பங்காளர் நடைமுறைக் கணக்கு செலவு |
| 06 | பங்காளர் மூலதன வட்டி | இலாபநட்ட பகிர் கணக்கு வரவு<br>பங்காளர் நடைமுறைக் கணக்கு செலவு |
| 07 | பங்காளர் இறுதி இலாபப்பகிர்வு | இலாபநட்ட பகிர் கணக்கு வரவு<br>பங்காளர் நடைமுறைக் கணக்கு செலவு |
| 08 | பங்காளர் செலவு மீதியுள்ள நடைமுறைக் கணக்கு வட்டி | இலாபநட்ட பகிர் கணக்கு வரவு<br>பங்காளர் நடைமுறைக் கணக்கு செலவு |
| 09 | பங்காளர் கடன் வட்டி | இலாபநட்ட பகிர் கணக்கு வரவு<br>பங்காளர் நடைமுறைக் கணக்கு செலவு |
| 10 | பங்காளர் வரவு மீதியுள்ள நடைமுறைக் கணக்கு வட்டி | பங்காளர் நடைமுறைக் கணக்கு வரவு<br>இலாபநட்ட பகிர் கணக்கு செலவு |
| 11 | பங்காளர் சார்பாக பங்குடைமை செய்த செலவு | பற்று/பங்காளர் நடைமுறைக் கணக்கு வரவு<br>உரிய செலவுக் கணக்கு செலவு |
| 12 | பங்குடைமை சார்பாக பங்காளர் செய்த செலவு | இலாபநட்ட கணக்கு வரவு<br>பங்காளர் நடைமுறைக் கணக்கு செலவு |
| 13 | பங்காளரது கட்டிடத்தில் தொழிற்படும் பங்குடைமையின் கட்டிட வாடகை | இலாபநட்ட கணக்கு வரவு<br>பங்காளர் நடைமுறைக் கணக்கு செலவு |
| 14 | பங்காளர் இறுதி நட்டப் பொறுப்பு | பங்காளர் நடைமுறைக் கணக்கு வரவு<br>இலாபநட்ட பகிர் கணக்கு செலவு |

தொகுப்பு திரு சி.திருக்குமரன், ஆசிரியர் கணக்கீடு, (யா/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி)
கணினிவடிவமைப்பு திரு கோ.கேதாரன், த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk